<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

**அசல் வழக்கு எண். 436/2016**

**வா.சா.1 – சாமிநாதன்**

**<u>24–07–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 8 – 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் வழக்கு க.ச. எண். 141/1ன் உட்பிரிவு 141/1C என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரம் 141/1ல் நடந்த உட்பிரிவை நான் ஏற்றுக்கொண்டு 141/1C என்று குறிப்பிட்டுதான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மாவட்ட உரிமையில் நீதிமன்றம் திருப்பூரில் அ.வ. எண். 1067/2004 வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஞாபயம் இல்லை, என்னிடம் காட்டப்படுவது அ.வ. எண். 1067/2004ன் தீர்ப்பாணை என்றால் சரிதான். **அ.வ. எண். 1067/2004ன் தீர்ப்பைாணை பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காண்பிக்கப்படுவது அ.வ. எண். 1067/2004 ன் தீர்ப்புரை என்றால் தெரியவில்லை.

2. அ.வ. எண். 1067/2004 தள்ளுபடியாகிவிட்டது என்றால் தெரியாது. அ. வ. எண். 1067/2004 தள்ளுபடியானதுக்கு எதிராக நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் ஞாபயம் இல்லை. நான் மேற்படி வழக்கில் 141/1ல் ஏற்பட்ட உட்பிரிவை ஏற்றுக்கொண்டு தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்பாத்திய கோரிக்கை வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். எதிர்பாத்திய கோரிக்கை வழக்கில் 141/1Cல் உள்ள கிழமேல் 15 அடி அகள வன்டித்தடம் தென்புறம் எல்லையின் உள்ளதாக சொல்லியிருந்தார்கள் என்றால் சரிதான். எதிர்பாத்திய கோரிக்கை வழக்கு தள்ளுபடியானது பொறுத்து மேல்முறையீட்டு வழக்கு எண். 11/2015 தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது.

3. மேற்படி மேல் முறையீடு அனுமதிக்கப்பட்டதை எதிர்த்து நான் இரண்டாவது மேல்முறையீடு எண். 365/2012 தாக்கல் செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. 18.01.2019 ல் மேற்படி இரண்டாவது மேல்முறையீடு தள்ளுபடியாகிவிட்டது என்றால் தெரியாது. ஆகையால் 1067/2004 ல் வழங்கப்பட்ட தீர்ப்பு, மேல்முறையீட்டு எண். 11/2009 தீர்ப்பு, இரண்டாவது மேல்முறையீட்டு எண் 365/2012 ல் வழங்கப்பட்ட தீர்ப்பு மூலம் இறுதிநிலையானது என்றால் தெரியாது. அ வ. எண். 1067/2004 ல் க.ச. எண். 141/1 உட்பிரிவனை ஏற்றுக்கொண்டு வழக்கு தாக்கல் செய்துவிட்ட தற்போது அதனை ஏற்றுக்கொண்டால் எனக்கு எதிராகும் என்பதால் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. க.ச. எண். 141/1 ல் நடந்தது UDR உட்பிரிவு என்றால் சரிதான். 30.04.1984 ல் UDR உட்பிரிவு நடந்தது என்றால் 1987 ல் நடந்தது. க.ச. எண். 141/1 உட்பிரிவு செய்யப்பட்டு 141/1A முதல் 141/1C வரை ஆகியுள்ளது என்றால் சரிதான். உட்பிரிவு உத்தரவில் நான் தரப்பினர் என்றால் சரிதான்.

(சாட்சியின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மேலும் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.